<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

**<u>M.C.O.P. No.151/2023</u>**

PW–1 ருத்ரா நாள். 19.06.2025

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>

என் கணவர் விபத்துக்கு முன்பும் , என்னுடைய திருமணத்திற்கு முன்பும் துபாயில் GIZTECH LIFTS AND ESCALATORS LLS நிறுவனத்தில் 2018ம் ஆண்டு பணியில் சேரும்போது பணிபுரிந்து மாதம் 4000 திர்ஹம்ஸ் , இந்திய மதிப்பில் ரூ.84,000/– சம்பளம் பெற்றுள்ளார். அந்த சம்பள சான்று நகல் மெயில் மூலம் பெற்றது ம.சா.ஆ.30 (எதிர்மனுதாரர் ஆட்சனையுடன் குறியீடு செய்யப்பட்டது) 2018ம் ஆண்டு வேலைக்கு சென்ற பின்னர் 2021ம் ஆண்டு திருமணத்திற்காக என் கணவர் இந்தியா வந்தார். திருமணம் முடிந்து வெளிநாடு சென்றுவிட்டு 2023 ம் ஆண்டில் விடுமுறையில் மீண்டும் இந்தியா வந்தார். அப்போது மாதம் 5000திர்ஹம்ஸ் சம்பளம் என்று சொன்னார். அது இந்திய மதிப்பில் ரூ.1,10,000/– ஆகும். அதுகுறித்து சம்பள சான்று பெறுவதற்கு தெரிந்தவர்கள் யாரும் இல்லாததால் வாங்கமுடியவில்லை.

<u>2ம் எதிர்மனுதார் குறுக்கு விசாரணை</u>

ம.சா.ஆ.30 ஆணவம் 09.05.2023 என்று தேதியிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சாா.ஆ.30ல் Monthly salary compensation என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மேனஜரிடம் பலமுறை கேட்டதற்கு விஜய் மெயிலுக்கு ம.சா.ஆ.30 ஆவணத்தை அனுப்பி வைத்தார். அதை பதிவிறக்கம் செய்ததற்கு தனியாக சான்று வைத்துள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.30 ஆவணம் என் கணவர் பணிபுரிந்த கம்பெனியால் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. 2023ம் ஆண்டில் என் கணவர் கூடுதலாக சம்பளம் வாங்கினார் என்று ம.சா.ஆ.30 குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.30ல் தூதரக முத்திரை இல்லையென்றால் சரிதான். ம.சா.ஆ.30 சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. என் கணவர் வங்கி மூலம் பணம் அனுப்பினாரா என்றால் அவர் இந்தியாவில் இருப்பவர்கள் மூலம் உண்டியல் பணமாக அனுப்பினார். என் கணவருக்கு வங்கி கணக்கு

இருக்கிறது. அந்த வங்கி கணக்கு பட்டியலை என்னால் தாக்கல் செய்ய முடியும். என் கணவருக்கு குறைவான சம்பளம் என்றும், வங்கி கணக்கு விவரத்தை தாக்கல் செய்தால் அது தெரிந்து விடும் என்பதால் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.30 கம்பெனி இயங்கி வருவதற்கு நான் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.